**IN THE COURT OF THE DISTRICT MUNSIF,**
**Present: Miss.D.V.Koperundevi, B.Com., LLB., (Hons),**
**District Munsif, Arni.**
**O.S.32 /2023**

2026—ம் ஆண்டு ஜனவரி மாதம் 19ம் நாள் திங்கட்கிழமை வாதி தரப்பு சாட்சியின் சாட்சியம். உறுதிமொழிச்சட்டம் 1969, பிரிவு 3—ன் படி என்னால் ஆணையிடப்பட்டு, சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டு குறுக்கு விசாரணை செய்யப்படுகிறது.

P.W.1 தேவி, வயது 54 , க/பெ திருமலை

**குறுக்கு விசாரணை (பிரதிவாதிகள் 5 முதல் 10 வரை)**

நான் இவ்வழக்கை என்ன பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் வேறு ஒருவர் பெயரில் உள்ள என் நிலத்திற்கான பட்டா மாற்றம் கோரி இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளேன். வாதிகள் 1 யார் என்றால் வாதி 1 என் தாயார் ஆவார். வழக்கு சொத்து எப்படி எனக்கு பாத்தியப்பட்டது என்றால் என்னுடைய பூர்வீக சொத்தாகும். ஆதியில் இவ்வழக்கு சொத்து யாருக்கு பாத்தியப்பட்டது என்றால் என் தாத்தா அப்பா பிள்ளைக்கு பாத்தியப்பட்டதாகும். என் தாத்தா பெயரில் ஏதேனும் கிரையப் பத்திரம் உள்ளதா என்றால் நான் இவ்வழக்கில் தாக்கல் செய்துள்ளேன்.

2. பொன்னுசாமிபிள்ளை, ஸ்ரீனிவாச பிள்ளை ஆகியோர் என் தாத்தாவுடன் பிறந்தவர்கள் ஆவார்கள். 2005ம் ஆண்டு 3 ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளேன் என்று என் வாதுரையில் குறிப்பிட்டுள்ளது என்ன ஆவணங்கள் என்றால் என்னிடம் காண்பிக்கப்படும் வா.சா.ஆ.4 மற்றும் வா.சா.ஆ.5 ஆவணங்களை பார்த்து விட்டு சாட்சி வா.சா.ஆ.4 அரிதாஸ் என்பவர் துரைசாமிபிள்ளையிடமிருந்து வாங்கிய கிரைய பத்திரம், வா.சா.ஆ.5 தாவா சொத்திற்கு சம்மந்தமில்லை. என்னுடைய நிலத்திற்கு பக்கத்து மனையினுடைய பத்திரமாகும்.

3. என் அம்மா சரஸ்வதி பெயரில் பட்டா மாற்றப்பட்டுள்ளதா என்றால் இல்லை. என்னுடைய அம்மா பெயரில் பட்டா ஏதும் இல்லாமல்தான் எனக்கு 2019ம் ஆண்டு எனக்கு தான செட்டில்மென்ட் பத்திரம் எழுதி வைத்தார் என்றால் சரிதான், அதன் பின்னிட்டுதான் பட்டா மாற்றம் செய்ய சென்றோம், அந்த சமயத்தில்தான் மேற்படி பட்டா எங்கள் பெயரில் இல்லை என்ற விவரம் தெரிய வந்தது. 2019ம் ஆண்டு நான் ஆரணி தாலுக்கா காவல் நிலையத்தில் ஒரு புகார் கொடுத்துள்ளேன் அது யார் மீது கொடுக்கப்பட்ட புகார் என்றால் செந்தில் என்பவர் என் நிலத்தில் அராஜகம் செய்து என்னை அடியாட்களை வைத்து அடிக்க வந்ததால் நான் அவர் மீது புகார் கொடுத்தேன்.

4. நான் தாக்கல் செய்துள்ள ஆவணம் வா.சா.ஆ.23 எங்கள் இருவர் மீதும் சட்டம் ஒழுங்கிற்காக வழக்கு போடப்பட்டுள்ளது என்றால் சரிதான். நாங்கள் தாவா சொத்து சம்மந்தமாக வருவாய் துறையில் பட்டா மாற்றம் செய்ய கொடுத்த ஆவணங்களை நான் இவ்வழக்கில் தாக்கல்

செய்துள்ளேனா என்றால் செய்துள்ளேன். மேற்படி நான் கொடுத்த ஆவணங்களின் அடிப்படையில் வருவாய் துறை சரி செய்ய இயலாத காரணத்தால் நீதிமன்றத்தில் சென்று பார்த்துக் கொள்ளுமாறு அறிவுறுத்தி அனுப்பினார்கள் என்றால் சரிதான்.

5. மேற்படி தாவா சொத்து யாருடைய அனுபவத்தில் உள்ளது என்றால் என்னுடைய அனுபவத்தில்தான் உள்ளது. அனுபவத்தில் உள்ளது என்றால் நாங்கள் வருவாய் துறையால் பட்டா மாற்றம் செய்து வரி கட்டி அனுபவிக்கவில்லை என்றால் சரிதான். நான் இவ்வழக்கை ஆவணங்கள் அடிப்படையில் நிரூபிக்க தவறியதால் இவ்வழக்கை தள்ளுபடி செய்ய வேண்டும் என்றால் சரியல்ல. வழக்கில் உள்ள பிரதிவாதிகள் 5 முதல் 10 வரையான பிரதிவாதிகள் அவசியமற்ற தரப்பினர்கள் என்றால் சரியல்ல.

குறுக்கு விசாரணை முடிவடைந்தது. மறு விசாரணை இல்லை.

Typed down to my dictation in my presence and hearing and under my personal direction and superintendence and interpreted to the witness in the presence of the Plaintiffs / Defendants and admitted by the witness to be correct.

Sd/- D.V.Koperundevi,
District Munsif,
Arni